ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30,சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2020.09.14 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 யூலை

## முக்கிய பண்புகள்

| | 2020 யூலை | 2020 சன - யூலை |
|---|---|---|
| வர்த்தகப் பற்றாக்குறை | ஐ.அ.டொலர் 209 மில்<br>2019 யூலை: ஐ.அ.டொ 717 மில் | ஐ.அ.டொலர் 3,470 மில்<br>சன-யூலை 2019: ஐ.அ.டொ. 4,314 மில் |
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | ஐ.அ.டொலர் 1,085 மில்<br>2019 யூலை: ஐ.அ.டொ 999 மில்<br>8.7% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொலர் 5,498 மில்<br>சன-யூலை 2019: ஐ.அ.டொ. 6,998 மில்<br>-21.4% ஆண்டிற்கு ஆண்டு |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | ஐ.அ.டொலர் 1,294 மில்<br>2019 யூலை: ஐ.அ.டொ 1,716 மில்<br>-24.6% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொலர் 8,968 மில்<br>சன-யூலை 2019: ஐ.அ.டொ. 11,312 மில்<br>-20.7% ஆண்டிற்கு ஆண்டு |

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**
2020 யூலை: -
சன-யூலை 2020: ஐ.அ.டொ. 956 மில்
(-54.9% ஆண்டிற்கு ஆண்டு)

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**
2020 யூலை: ஐ.அ.டொ. 702 மில்
(12.2% ஆண்டிற்கு ஆண்டு)
சன-யூலை 2020: ஐ.அ.டொ. 3,682 மில்
(-5.5% ஆண்டிற்கு ஆண்டு)

**கொபப** (முதனிலை மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய)
யூலை 2020: ஐ.அ.டொ. -18 மில்.
சன-யூலை 2020: ஐ.அ.டொ. -129 மில்.




**அரச பிணையங்கள்** (தேறிய)
யூலை 2020: ஐ.அ.டொலர் -23 மில்.
சன-யூலை 2020: ஐ.அ.டொலர் -515 மில்.




**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்**
யூலை 2020 இறுதியில் - ஐ.அ.டொலர் 7.1 பில்
(4.8 மாத இறக்குமதிகள்)




**செலாவணி வீதம் (ஐ.அ.டொ. ஒன்றுக்கு ரூ.)**
திசெ இறுதியில் 2019 – 181.6340
யூலை இறுதியில் 2020 – 185.6769




இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனைப் புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிட முடியும்.
https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## பொதுநோக்கு

2020 யூலையில் இலங்கையின் வெளிநாட்டுத் துறை, வணிகப்பொருட்களின் இறக்குமதிகளில் காணப்பட்ட குறைப்புக்களுக்கும் மத்தியிலும் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளில் காணப்பட்ட அதிகரிப்பு மற்றும் அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பனவற்றின் உதவியுடன் மேலும் மீட்சியடைந்தது. கொவிட்-19 தொற்றிற்கு மத்தியிலும் பல குறிப்பிடத்தக்க சாதனைகள் அவதானிக்கப்பட்டன. யூலையில் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 சனவரியின் பின்னர் முதற்றடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சிக் காணப்பட்டதுடன் 2020 பெப்புருவரியின் பின்னர் முதற்றடவையாக நேர்க்கணியமான ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியையும் பதிவுசெய்தது. எதிர்பார்க்கப்பட்டவாறு, இன்றியமையாதனவல்லாத பொருட்களின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட தொடர்ச்சியான கட்டுப்பாடுகளின் காரணமாக வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் தொடர்ந்தும் குறைவடைந்து காணப்பட்டன. 2020 யூலையில் தொழிலாளர் பணவனுப்பல்களில் கணிசமானளவு அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் 2018 சனவரியின் பின்னர் மாதாந்தப் பணவனுப்பல்களில் மிக உயர்ந்த தொகையொன்று பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் சார்க் நிதியத்தின் பரஸ்பர பரிமாற்றல் வசதி பெறப்பட்டமையின் காரணமாக 2020 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 7.1 பில்லியனுக்கு அதிகரித்தது. உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினை தளர்த்தியதுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக தேறிய அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணியை ஈர்த்துக் கொள்வதற்கு மத்திய வங்கியை இயலுமைப்படுத்தியது. அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பனவற்றிலிருந்தான வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் இம்மாத காலப்பகுதியில் தொடர்ந்தும் காணப்பட்ட போதும் அவை ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டங்களிலேயே இருந்தன. 2020 யூலை மாதத்தில் இலங்கை ரூபா உறுதியடைந்து சிறிதளவு உயர்வினைப் பதிவுசெய்தது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)

| வகை | யூலை 2019 ஐ.அ.டொ மில் | யூலை 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன - யூலை 2019 ஐ.அ.டொ மில் | சன - யூலை 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 999 | 1,085 | 8.7 | 6,998 | 5,498 | -21.4 |
| இறக்குமதிகள் | 1,716 | 1,294 | -24.6 | 11,312 | 8,968 | -20.7 |
| வர்த்தக மீதி (தேறிய) | - 717 | -209 | | - 4,314 | -3,470 | |
| சுற்றுலாவிலிருந்தானவருவாய்கள் | 218 (ஆ) | - | - | 2,119 (ஆ) | 956 (இ) | -54.9 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 626 | 702 | 12.2 | 3,895 | 3,682 | -5.5 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கானஉட்பாய்ச்சல் (தேறிய)(ஈ) | 44 | -18 | | 34 | -129 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 110 | 91 | | 5,665 | 1,297 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 40 | 1 | | 417 | 91 | |
| நீண்ட காலக் கடன்கள் | 70 | 90 | | 849 | 1,206 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 4,400 | - | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | | | | 255 | 192 | |
| திரண்ட நிலுவை | | | | 1,490 | -939 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது

(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்

(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது

(உ) இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- 2020 யூலையில் ஏற்றுமதி அதிகரித்த வேளையில் இறக்குமதிகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தமையின் காரணமாக **வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை** 2019 யூலையின் ஐ.அ.டொலர் 717 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 209 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 509 மில்லியனால் குறுக்கமடைந்தது. அத்துடன் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2020இன் சனவரி – யூலை மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை, 2019இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 4,314 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 3,470 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 884 மில்லியனால் குறுக்கமடைந்தது. இக்காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட வீழச்சிக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 1இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- அதேவேளை, **வர்த்தக மாற்று விகிதம்** அதாவது இறக்குமதி விலைகளுக்கான ஏற்றுமதி விலைகளின் விகிதம் 2020 யூலையில் (ஆண்டிற்கு ஆண்டு) 4.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க ஏற்றுதிகளின் விலைகள் விரைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

**வரைபடம்: 1 : 2020 சனவரி – யூலையில் வர்த்தகப் பற்றாக்குறையின் வீழ்ச்சிக்குப் பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்லியனில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019 – 2020)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2019 - 2020)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- **வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் 2020 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 894 மில்லியனிலிருந்து 2020 யூலையில் ஐ.அ.டொலர் 1,085 மில்லியனுக்குத் தொடர்ச்சியாக அதிகரித்தமைக்கு உள்நாட்டு மற்றும் உலகளாவிய வழங்கல் இரண்டும் கேள்விச் சங்கிலியும் குறிப்பிட்டளவிற்கு மீட்சியடைந்தமையும் ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கு அரசாங்கம் வழங்கிய உதவியும் காரணங்களாக விளங்கின. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2020 யூலையில் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 8.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இந்நேர்க்கணிய வளர்ச்சி 2020 பெப்புருவரிக்குப் பின்னர் முதற்றடவையாக அவதானிக்கப்பட்டதுடன் மூன்று முக்கிய வகை ஏற்றுமதிகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்கள் இதற்குக் காரணமாயின.

- 2020 யூலையில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் கடலுணவு என்பன நீங்கலாக, வேளாண்மை ஏற்றுமதிகளின் அனைத்துத் துணை வகைகளும் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. 2019 யூலையுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த சராசரி ஏற்றுமதி விலைகள் மற்றும் அளவுகள் என்பனவற்றின் காரணமாக 2020 யூலையில் தொடர்ந்து இரண்டாவது மாதமாக தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. வாசனைத்திரவியங்களின் அனைத்துத் துணைவகைகளினதும் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளின் காரணமாக வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த வேளையில் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் உயர்ந்த சராசரி ஏற்றுமதி விலைகள் மற்றும் உள்ளீடு அல்லாத உற்பத்திகளின் உயர்ந்த ஏற்றுமதி அளவுகள் என்பனவற்றின் காரணமாக தெங்கு உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. அதேவேளை, சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு பாக்கின் ஏற்றுமதிகளின் உயர்ந்த அளவுகள் வழிவகுத்தன. மாறாக, கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்தான கடலுணவிற்கான கேள்வி குறைவடைந்தமையின் விளைவாக குறைந்த அளவுகள் ஏற்றுமதி செய்யப்பட்டமையே காரணமாக அமைந்தது.

- 2020 யூலையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் 2020 பெப்புருவரிக்குப் பின்னர் முதற்றடவையாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் நேர்க்கணியமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இவ்வதிகரிப்பு, உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், விலங்குத்தீன், இறப்பர் உற்பத்திகள் மற்றும் அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் என்பனவற்றுடன் தொடர்பான ஏற்றுமதிகளின் வருவாய்களிலிருந்தே கிடைத்தன. ஏனைய தயாரிக்கப்பட்ட பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள முகக்கவசங்கள் மற்றும் பாதுகாப்பு உடைகள் போன்ற தனியாள் பாதுகாப்பு சாதனங்களிலிருந்தான வருவாய்களில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்ட போதும் 2020 யூலையில் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் 1.4 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமான ஆடை ஏற்றுமதிகள் குறைவடைந்தமையே காரணமாகும். அதேவேளை, ரயர் ஏற்றுமதிகளின் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்ட போதும் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு அறுவைச் சிகிச்சை மற்றம் ஏனையவற்றிற்கான கையுறைகளின் ஏற்றுமதிகளே காரணமாக அமைந்தன. 2020 யூலை மாத காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் அதன் பொருட்கள் மற்றும் பொறித் தொகுதிகள், எந்திர சாதனங்கள் என்பனவற்றினை உள்ளடக்கிய கைத்தொழில் ஏற்றுமதிகளின் ஏனைய துணைவகைகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

- 2020 யூலையில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தமைக்கு இரும்புத் தாதுக்கள், கழிவு இரும்புகள் மற்றும் சாம்பல் கட்டிகள் மற்றும் புவிசார் கற்களின் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்கள் காரணங்களாக அமைந்தன.

- 2020 யூலையில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 26.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 13.8 சதவீதத்தினால் தேய்வடைந்து 2019 யூலையுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பு உயர்ந்த ஏற்றுமதி அளவுகளிலிருந்து முழுமையாகப் பெறப்பட்டது என்பதனை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | யூலை 2019 ஐ.அ.டொ மில் | யூலை 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-யூலை 2019 ஐ.அ.டொ மில் | சன-யூலை 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **789.5** | **819.4** | **3.8** | **5,518.1** | **4,176.5** | **-24.3** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 36.7 | 64.3 | 75.4 | 270.0 | 262.2 | -2.9 |
| விலங்குத்தீன் | 10.0 | 18.7 | 87.2 | 80.7 | 67.9 | -15.9 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 475.6 | 469.2 | -1.4 | 3,237.0 | 2,413.0 | -25.5 |
| இதில் ஆடைகள் | 443.4 | 404.3 | -8.8 | 3,014.2 | 2,138.5 | -29.1 |
| புடவைகள் | 23.1 | 26.5 | 14.9 | 161.0 | 132.4 | -17.8 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.1 | 38.3 | 319.2 | 61.8 | 142.1 | 130.1 |
| இறப்பர் உற்பத்திகள் | 76.3 | 82.2 | 7.8 | 518.4 | 417.9 | -19.4 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.7 | 17.7 | -28.3 | 175.6 | 90.5 | -48.5 |
| பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 36.0 | 32.0 | -11.2 | 242.5 | 178.4 | -26.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.2 | 8.2 | 13.6 | 114.5 | 39.1 | -65.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 43.0 | 26.7 | -38.0 | 285.0 | 246.2 | -13.6 |
| இரசாயன உற்பத்திகள் | 15.5 | 16.6 | 7.3 | 103.4 | 91.9 | -11.1 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.2 | 10.9 | 7.4 | 80.9 | 55.4 | -31.6 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 0.7 | 6.3 | 831.7 | 24.0 | 21.4 | -11.0 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 6.3 | 6.4 | 1.5 | 64.4 | 32.5 | -49.5 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.2 | 22.2 | 255.0 | 42.6 | 48.9 | 14.8 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 16.4 | 10.1 | -38.5 | 107.1 | 65.5 | -38.8 |
| மட்பாண்டஉற்பத்திகள் | 2.7 | 2.4 | -9.4 | 16.8 | 11.5 | -31.5 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 22.1 | 25.5 | 15.6 | 155.2 | 134.3 | -13.5 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **205.1** | **261.2** | **27.3** | **1,450.2** | **1,300.1** | **-10.3** |
| தேயிலை | 111.3 | 130.9 | 17.6 | 796.3 | 702.6 | -11.8 |
| இறப்பர் | 1.9 | 2.9 | 49.7 | 16.9 | 16.4 | -3.3 |
| தெங்கு | 30.9 | 40.8 | 32.2 | 204.1 | 187.6 | -8.1 |
| வாசனைத்திரவியங்கள் | 26.5 | 40.9 | 54.6 | 170.1 | 154.8 | -9.0 |
| காய்கறிகள் | 2.5 | 7.1 | 187.8 | 18.5 | 21.0 | 13.7 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.8 | 2.5 | -11.0 | 19.4 | 12.0 | -38.0 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 8.8 | 17.5 | 98.4 | 61.1 | 88.2 | 44.4 |
| கடலுணவு | 20.4 | 18.5 | -9.4 | 164.0 | 117.6 | -28.3 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.7** | **2.9** | **7.4** | **19.4** | **12.6** | **-35.0** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.3** | **1.6** | **24.7** | **10.1** | **8.6** | **-14.9** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **998.5** | **1,085.0** | **8.7** | **6,997.7** | **5,497.8** | **-21.4** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்,இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- 2020 மாச்சிலிருந்து **வணிகப்பொருள் இறக்குமதிகள்** மீதான செலவினத்தில் அவதானிக்கப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிடைந்து செல்லும் போக்கு 2020 யூலையிலும் தொடர்ந்ததுடன் அது ஐ.அ.டொலர் 1,294 மில்லியனுக்கு 24.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 2020 யூலையில் அனைத்து முக்கிய இறக்குமதித் துறைகளின் மீதுமான செலவினம் வீழ்ச்சியடைந்தது. இக்குறைப்பிற்கு, கொவிட்-19 தொற்றினால் உருவாக்கப்பட்ட மோசமான தாக்கங்களைத் தணிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட இன்றியமையாதனவல்லாத பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக 2020 மாச்சிலிருந்து அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் மேற்கொள்ளப்பட் வழிமுறைகள் ஓரளவிற்குக் காரணமாக அமைந்தன.

- இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 யூலையில் வீழ்ச்சியடைந்தமைக்கு எரிபொருள் இறக்குமதிகளும் (-36.3 சதவீதம்), புடவை மற்றும் புடவைப்பொருட்களின் இறக்குமதிகளும் (-20.7 சதவீதம்) வழிவகுத்தன. எரிபொருள் இறக்குமதிகளின் செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பிற்கு சுத்திகரிக்கப்பட்ட மற்றும் மசகெண்ணெய் இறக்குமதிகள் காரணங்களாக அமைந்ததுடன் இதற்கு பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட குறைந்த பெற்றோலிய விலைகள் வழிவகுத்தன. 2020 யூலையில் மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை ஓராண்டிற்கு முன்னர் காணப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 68.73 உடன் ஒப்பிடுகையில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 46.23 இற்கு வீழ்ச்சியடைந்தது. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதி அளவுகள் வீழ்ச்சியடைந்த வேளையில் 2019 யூலையுடன் ஒப்பிடுகையில் 2020 யூலையில் மசகெண்ணெய் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளில் உயர்ந்த அளவுகள் பதிவுசெய்யப்பட்டன. அதேவேளை, புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களின் இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தமைக்கு துணிகள் மற்றும் நூலிழைகளின் குறைந்த இறக்குமதிகளே காரணமாக அமைந்தன. மேலும், 2020 யூலையில் இடைநிலைப்பொருட்களின் கீழான மற்றைய அனைத்துத் துணைவகைகளின் மீதுமான செலவினமும் 2019 யூலையுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.

- இறக்குமதிச் செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் விளைவாக, 2020 யூலையில் முதலீட்டுப்பொருட்களின் அனைத்துத் துணை வகைகளினதும் வீழ்ச்சியின் காரணமாக முதலீட்டுப்பொருட்களின் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. இதன்படி, 2020 யூலையில் பொறிகள் மற்றும் கருவிகள் (முக்கியமாக பொறியியல் சாதனங்கள், இலத்திரனியல் சாதனங்கள், தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள், எந்திரங்கள் மற்றும் சாதனங்களின் உதிரிப்பாகங்கள்), கட்டடப்பொருட்கள் (முக்கியமாக இரும்பு, உருக்கு மற்றும் அவற்றின் பொருட்கள், பிளாத்திக்கு, இறப்பர், கண்ணாடிப்பொருட்கள் மற்றும் சிமெந்து) மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் (முக்கியமாக தாங்கிகள் மற்றும் நீர்த்தாங்கிகள் மற்றும் முச்சில்லு வண்டிகள் போன்ற வர்த்தக ரீதியான ஊர்திகள்) என்பனவற்றின் மீதான செலவினம் 2019 யூலையுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.

- உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் அதிகரித்த போதும், நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் வழிவகுத்தன. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையின் விளைவாக தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் (முக்கியமாக செல்லிடத் தொலைபேசிகள் மற்றும் மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள்) நீங்கலாக மற்றைய அனைத்துத் துணைவகைகள் மீதுமான குறைந்த செலவினத்தின் காரணமாக உணவல்லா நுகர்வுப்பொருட்கள் வீழ்ச்சியடைந்தன. உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் 93.6 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்து 2009 திசெம்பர் மாதத்திற்குப் பின்னரான மிகக் குறைந்த மாதாந்தச் செலவினத்தினைக் காட்டியது. அதேவேளையில், 2020 யூலையில் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு சீனி, கொழுப்பு மற்றும் எண்ணெய் (முக்கியமாக தேங்காயெண்ணெய்) மற்றும் காய்கறிகள் (முக்கியமாக பருப்பு வகைகள்) என்பன வழிவகுத்தன.

- 2020 யூலையில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் முறையே 16.1 சதவீதத்தினாலும் 10.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து, இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2019 யூலையுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவுகள் மற்றும் குறைந்த விலைகள் இரண்டும் காரணங்களாக அமைந்தமையினை எடுத்துக்காட்டின.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | யூலை 2019 ஐ.அ.டொ மில் | யூலை 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-யூலை 2019 ஐ.அ.டொ மில் | சன-யூலை 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **356.0** | **289.6** | **-18.7** | **2,167.1** | **2,071.7** | **-4.4** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 109.3 | 130.2 | 19.1 | 799.2 | 917.5 | 14.8 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 3.0 | 1.3 | -57.2 | 19.3 | 18.0 | -6.7 |
| பாற்பண்ணை உற்பத்திகள் | 26.5 | 24.8 | -6.2 | 178.1 | 205.9 | 15.6 |
| காய்கறிகள் | 23.8 | 25.6 | 7.8 | 165.1 | 228.0 | 38.1 |
| கடலுணவு | 20.5 | 19.3 | -5.6 | 127.7 | 126.8 | -0.7 |
| சீனி மற்றும் இனிப்பு வகைகள் | 9.0 | 27.7 | 206.4 | 113.4 | 144.1 | 27.1 |
| வாசனைத்திரவியங்கள் | 11.3 | 8.5 | -25.1 | 61.4 | 76.2 | 24.1 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 15.2 | 23.0 | 50.7 | 134.2 | 118.5 | -11.7 |
| உணவல்லா நுகர்வுப்பொருட்கள் | 246.8 | 159.4 | -35.4 | 1,367.9 | 1,154.2 | -15.6 |
| தனியாள் ஊர்திகள் | 95.4 | 6.1 | -93.6 | 419.6 | 279.5 | -33.4 |
| மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் | 50.4 | 63.0 | 24.9 | 299.6 | 337.7 | 12.7 |
| வீட்டு உபயோகப்பொருட்கள் | 16.1 | 8.8 | -45.4 | 113.7 | 91.8 | -19.3 |
| ஆடைகள் மற்றும் அதன் துணைப்பொருட்கள் | 21.9 | 13.4 | -38.7 | 156.0 | 124.4 | -20.3 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 26.0 | 45.6 | 75.1 | 141.2 | 146.9 | 4.1 |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடப்பொருட்கள் | 15.4 | 10.6 | -30.7 | 90.7 | 81.1 | -10.5 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 21.5 | 11.8 | -45.1 | 147.1 | 92.8 | -37.0 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **969.6** | **734.3** | **-24.3** | **6,516.0** | **4,901.1** | **-24.8** |
| எரிபொருள் | 314.7 | 200.3 | -36.3 | 2,315.6 | 1,443.7 | -37.7 |
| இதில் மசகெண்ணெய் | 94.1 | 67.0 | -28.9 | 585.4 | 318.3 | -45.6 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 220.5 | 130.6 | -40.8 | 1,604.9 | 996.2 | -37.9 |
| நிலக்கரி | 0.1 | 2.8 | 4140.3 | 125.3 | 129.2 | 3.1 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 21.4 | 10.3 | -51.9 | 109.5 | 49.5 | -54.8 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 248.6 | 197.1 | -20.7 | 1,643.4 | 1,262.8 | -23.2 |
| தாள், தாள் அட்டைகள் மற்றும் அதன் பொருட்கள் | 42.3 | 33.8 | -20.1 | 253.5 | 208.9 | -17.6 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 19.4 | 16.1 | -16.8 | 113.8 | 117.9 | 3.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 35.1 | 26.8 | -23.7 | 178.5 | 183.3 | 2.7 |
| அடிப்படை உலோகங்கள் | 47.1 | 36.4 | -22.8 | 324.6 | 207.6 | -36.0 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 55.0 | 46.6 | -15.2 | 344.9 | 275.0 | -20.3 |
| இரசாயன உற்பத்திகள் | 75.2 | 74.1 | -1.5 | 486.7 | 453.0 | -6.9 |
| வளமாக்கி | 12.0 | 9.1 | -24.3 | 105.3 | 116.1 | 10.2 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 21.2 | 18.6 | -12.2 | 130.0 | 128.8 | -0.9 |
| கனிம உற்பத்திகள் | 17.3 | 14.8 | (14.4) | 125.7 | 93.3 | (25.8) |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 60.4 | 50.3 | -16.8 | 384.3 | 361.2 | -6.0 |
| **3. முதலீட்டுப்பொருட்கள்** | **389.9** | **269.1** | **-31.0** | **2,625.5** | **1,984.3** | **-24.4** |
| பொறி மற்றும் சாதனம் | 193.5 | 157.0 | -18.8 | 1,425.8 | 1,147.0 | -19.6 |
| கட்டடப்பொருட்கள் | 148.8 | 94.2 | -36.7 | 874.2 | 589.3 | -32.6 |
| போக்குவரத்துச் சாதனம் | 46.8 | 17.7 | -62.2 | 321.3 | 246.2 | -23.4 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.9 | 0.3 | -71.3 | 4.1 | 1.7 | -57.6 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.4** | **0.7** | **77.6** | **3.4** | **11.2** | **231.9** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,715.9** | **1,293.7** | **-24.6** | **11,311.9** | **8,968.3** | **-20.7** |
| **எரிபொருள் அல்லா இறக்குமதிகள்** | **1,401.3** | **1,093.4** | **-22.0** | **8,996.3** | **7,524.6** | **-16.4** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- கொவிட்-19 தொற்றின் காரணமாக 2020 யூலையில் தொடர்ந்து நான்காவது மாதமாக சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை. எனவே, 2020இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1,124,150 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 507,311 ஆக தொடர்ந்தும் காணப்பட்டது.

- இதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட **சுற்றுலாவிலிருந்தான** ஒன்றுசேர்ந்த **வருவாய்கள் 2019இன்** தொடர்பான காலப்பகுதியிலிருந்தான 54.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020 முதல் ஏழு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 956 மில்லியனாகக் காணப்பட்டது.

- அதேவேளை, 2020 யூலையில் **தொழிலாளர் பணவனுப்பல்கள்,** ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், ஐ.அ.டொலர் 702 மில்லியனுக்கு, 12.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2020இன் சனவரி – யூலை காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,682 மில்லியனுக்கு 5.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 8: மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2020 யூலையில், ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட **அரச பிணையங்கள்** சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 23 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் பதிவுசெய்யப்பட்டமை 2020இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 515 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலைத் தோற்றுவித்தது. அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த வெளிநின்ற வெளிப்படுத்துகை 2020 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 69 மில்லியனாக அமைந்து குறிப்பிடத்தக்களவிற்கு தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது.

- 2020 யூலையில் **கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின்** இரண்டாந்தரச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 18 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்டது. 2020 யூலையில் முதலாந்தரச் சந்தை உட்பாய்ச்சல்கள் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2020இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 129 மில்லியன் (முதலாந்தரம் மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டும்) கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

- அதேவேளை, அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்களும் ஐ.அ.டொலர் 101 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சார்க் நிதியத்தின் பரஸ்பர பரிமாற்றல் வசதிகளின் பெறுகைகள் பெறப்பட்டமையுடன் 2020 யூலை இறுதியில் **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** ஐ.அ.டொலர் 7.1 பில்லியனுக்கு அதிகரித்து 4.8 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 10.0 பில்லியனாக விளங்கி 6.8 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

- 2020 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக உயர்வடைந்து வந்தஇலங்கை ரூபா 2020 யூலை மாத காலப்பகுதியிலும் உத்வேகமொன்றினைப் பேணியதுடன் இம்மாத காலப்பகுதியில் 0.3 சதவீதம் கொண்ட சிறிதளவு உயர்வினையும் பதிவுசெய்தது. ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து, ஐ.அ.டொலருக்கெதிராக ரூபாவின் கடுமையான உயர்வு 2020 செத்தெம்பர் 14 வரையான இவ்வாண்டுப் பகுதியில் ரூபாவின் ஒட்டுமொத்தத் தேய்வினை 1.6 சதவீதத்திற்கு மட்டுப்படுத்துவதற்கு வழிவகுத்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டத்தினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் மத்திய வங்கி உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ந்தும் தலையிட்டது. 2020 ஓகத்து இறுதி வரையிலான இவ்வாண்டுப்பகுதியில் தேறிய அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி ஐ.அ.டொலர் 200.4 மில்லியனை ஈர்த்துக் கொண்டது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபாவானது யூரோ, யப்பானிய யென் மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்த வேளையில் 2020 செத்தெம்பர் 14 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் ஸ்ரேர்லிங் பவுண் மற்றும் இந்தியன் ரூபாவிற்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | (2020 செத் 14 வரை) தேய்வு (-)/ உயர்வு (+) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | -1.6% |
| யூரோ | -12.7% | +2.6% | -6.9% |
| ஸ்ரேர்லிங் பவுண் | -11.4% | -2.8% | +0.8% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | -3.9% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | -5.3% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | +1.4% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி